**DEPOSITION OF WITNESS**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 11 /2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW7** | | |
| **Name** | : பால்பாண்டி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.05.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் பூச்சிப்பட்டியில் உள்ள குளத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு அரசு தரப்பு சாட்சிகளை தெரியும். விபத்தில் இறந்துபோன பாண்டி எனது சித்தப்பா ஆவார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 07:30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எனக்கு போன்மூலமும், மற்றொரு சின்னபெண் நேரிலும் வந்து எனக்கு தகவல் சொன்னதன்பேரில் சம்பவம் நடந்த இடத்திற்கு நான் சென்று பார்த்தேன். எனது சித்தப்பா விபத்திற்குள்ளாகி ரோட்டின் வடக்குபக்கமாக கிடந்தார். அவருக்கு காலிலும் தலையிலும் அடிபட்டு இருந்தது. அவர்மீது மோதிய வாகனம் சம்பவயிடத்தில் இல்லை. கார் கிழக்கு பக்கமாக சென்றுவிட்டதாக சொன்னார்கள்.

2. அடிபட்ட நபரை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் கொண்டு சென்றார்கள். நான் ஆட்டோவிற்கு பின்னால் சென்றேன். மதுரைக்கு மேல்சிகிச்சைக்காக ஆம்புலன்சில் கொண்டு சென்றார்கள், மறுநாள் அவர் இறந்துவிட்டார். அடிபட்ட நபர் சம்பவயிடத்தில் அவரது மகள் மற்றும் பேத்தியுடன் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** விபத்து நடந்த விபரத்தை நான் போன் மூலமாக தெரிந்துகொண்டேன். அசா.1 ரத்தினம் எனது சித்தப்பா மகள் ஆவார். விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோனவர் எனது உறவினர் என்றால் சரிதான். அவர் இறந்ததற்கு இழப்பீடு பெறுவதற்காக அசா.1 கொடுத்து பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./ Palpandi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.